**செய்தி வெளியீடு எண் : 2111** **நாள் : 23.11.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்களின் தலைமையில் திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு திருநங்கையர் நல வாரியத்தின் நான்காவது கூட்டம், சென்னை பனகல் மாளிகை, சமூக நல இயக்கக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருநங்கையர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் 13 பேரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் திருமதி. ஏ.எஸ்.குமரி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் இயக்குநர் மற்றும் திருநங்கையர் நல வாரியத்தின் உறுப்பினர்–செயலர் திருமதி. த. ரத்னா, இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் இயக்குநர் திரு. வீரராகவராவ், இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் அரசு இணைச் செயலாளர் திருமதி. ஆர். சீதாலட்சுமி, இ.ஆ.ப., சமூக நல இயக்ககத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. கார்த்திகா, இ.ஆ.ப., மற்றும் நல வாரியத்தின் அலுவல்சார் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

உறுப்பினர் – செயலர், திருநங்கைகள் நல வாரியம்,
தமிழ்நாடு அரசு.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in